செ.வெ.எண். 155 நாள்: 23.11.2016

## பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், அனைத்து பொதுக்கழிப்பிடங்களும் ஒருங்கிணைந்த பணியின் மூலம் தூய்மைப்படுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கழிப்பிடங்களும் ஒருங்கிணைந்த சிறப்பு நடவடிக்கையின் (Mass Cleaning Programme) மூலம் இன்று (23.11.2016) சுத்தப்படுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்கள் என 866 இடங்களில் 6641 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகள் திறந்தவெளியில் மலம் கழிப்பதை தடுத்திட 78 இடங்களில் குழந்தைகளுக்கான கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. இக்கழிப்பிடங்களை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நாளொன்றுக்கு 2 பணியாளர்கள் வீதம் 900 துப்புரவு பணியாளர்களை நியமித்து துப்புரவு பணிகளை முறையாக சுகாதாரமான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்களின் தேவையினை கருத்தில் கொண்டு கட்டமைப்புக் கழிப்பிடங்கள் (Pre-Fabricated Toilet) முதற்கட்டமாக 348 இடங்களில் 1120 கழிப்பறைகள் கட்ட தீர்மானிக்கப்பட்டு, நம்ம டாய்லெட் (Namma Toilet) 16 இடங்களில் 85 கழிப்பறைகளும், இ–டாய்லெட் (E-Toilet) 96 இடங்களில் 213 கழிப்பறைகளும், பயோ டாய்லெட் (Bio-Toilet) 33 இடங்களில் 98 கழிப்பறைகளும், பிரைம் டாய்லெட் (Prime Toilet) 40 இடங்களில் 52 கழிப்பறைகளும், எஸ்.எஸ்.எஸ். டாய்லெட் (SSS Toilet) 96 இடங்களில் 320 கழிப்பறைகள் என மொத்தம் 281 இடங்களில் 768 கழிப்பறைகள் சுமார் ரூ.13.53 கோடி மதிப்பீட்டில் தனியார் நிறுவனங்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழிப்பிடங்களை மேற்கண்ட தனியார் நிறுவனங்கள் மூலம் தூய்மையாகவும், சுகாதாரமான முறையிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சிறப்பு நடவடிக்கையாக ஒருங்கிணைந்த பணியின் மூலம் இன்று (23.11.2016) அனைத்து கழிப்பிடங்களையும் சுத்தம் செய்யும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் 1500 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு 1147 இடங்களில் 7409 கழிப்பறைகள் மற்றும் 78 குழந்தைகள் கழிப்பறைகளும் சுத்தப்படுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கழிப்பிடங்களையும் தொடர்ந்து சுத்தமாக வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி